# கலைத்துவ சினிமாக்கள் சமூக வாழ்வியலை மீள் வடிவமைப்பதில் பெறும் இடம் - 2015 இல் மட்டக்களப்பில் நடைபெற்ற ஐரோப்பிய திரைப்பட விழாவை மையப்படுத்திய ஓர் ஆய்வு

**சுந்தரலிங்கம் சந்தரிகுமார்**
நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.
srckumar20@yahoo.com ,

**ஆய்வுச் சுருக்கம்:**

சினிமா மனித வாழ்வுடன் பிரிக்க முடியாத ஒரு கலை. சமகாலத்தில் வர்த்தகத்தை மையப்படுத்திய ''மசாலச் சினிமாக்கள்'' பல வழிகளில் சமூகத்தை ஆக்கிரமிக்கின்றது. குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை சினிமாவில் பெரும் நாட்டம் கொள்கின்றனர். சினிமாக்கள் ஜனரஞ்சகச் சினிமா (Popular cinema) என்றும் கலைத்துவ சினிமா (Art cinema) என்றும் இரண்டாகப் பிரித்து நோக்கும் வழக்கம் உண்டு. கதாநாயகன் கதாநாயகியை மையப்படுத்தி காதல், நகைச்சுவை, வீரம், சண்டை என்பவற்றை யதார்த்த வாழ்வுக்கு அப்பால் புனைந்து அதற்கான அழகியலுடன் வடிவமைத்து வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டவை ஜனரஞ்சகச் சினிமாக்கள் ஆகும். இது சமூக, பண்பாட்டு, அரசியற் கருத்துக்களை தமக்கான அழகியல் ஒழுங்கில் வெளிப்படுத்தும் ஊடகம். இலாபத்தையும் மகிழ்வூட்டலையும் அடிப்படையாகக் கொண்ட இச்சினிமாவே, மக்களிடம் பிரபல்யம் அடைந்துள்ளது. ஜனரஞ்சகத் தன்மை கொண்ட தமிழ்ச் சினிமாக்கள் சமூக அரசியல், முற்போக்கு, சாதிய அடக்குமுறை என்பவற்றைப் பேசினாலும், பெண்களைக் காட்சிப் பண்டங்களாக்குவதும்,வன்முறையைத் தூண்டுவதும் சமூகத்தை அதன் பார்வைக்குள் இழுப்பதும் நடக்கின்றது. ஒரு இளைஞன் நினைத்தால், சமூகத்தை மாற்றிவிடலாம் என்பதும், துப்பாக்கியால் எதிரியினை அழித்துவிடலாம் என்பதும் இச்சினிமாக்களின் அச்சாணியாகும். இவை யதார்த்தத்திற்கு மாறானது. இதனை ஏற்று கைதட்டி வரவேற்றுக் கொண்டாடும் நுகர்வுப் பண்பாடே எம்மிடம் நிலவுகின்றது. மக்களது வாழ்வை யதார்த்த பூர்வமாக வடிவமைத்துத் தருவது கலைத்துவ சினிமாவாகும். கலைத்துவ சினிமா மெய்மையைப் பதிவு செய்து அகவயக் காட்சியை மீண்டும் உருவாக்குவதையும், குற்ற உணர்வை வெளிப்படுத்துவதையும், மெய்பொருளைக் காணுதலையும் பிரதானமாகக் கொண்டது. காலத்திற்கேற்ப உண்மைகளைச் சொல்லும். இது மனிதருடன் தொடர்புபட்ட உணர்வுகள், நினைவுகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவது. மனிதரது நெருக்கடியான வாழ்க்கைகளை கலையழகுடன் கூறுவது. வில்லன், கதாநாயகன் அற்ற இயல்பான காட்சிப்படுத்தல்களைத் தருவது. இவ்வாறான சினிமாக்களைக் காட்சிப்படுத்தி, கலந்துரையாடுவது சமகாலத் தேவையாகும். சமூக வாழ்வியலை மீள் வடிவில் தரும் ஊடகமாக கலைத்துவ சினிமாக்கள் காணப்படும் விதத்தினை 2015 இல் மட்டக்களப்பில் நடைபெற்ற ஐரோப்பிய திரைப்பட விழாவை மையப்படுத்தி ஆராயப்படுகின்றது.

**பிரதான சொற்பதங்கள்**: கலைச் சினிமா, மசாலா சினிமா, யதார்த்த வாழ்வு, சமூக வாழ்வியல்.

## அறிமுகம்

சமூக வாழ்கைக்கும் வளத்திற்குமான ஊடகமாகச் செயற்படும் கலைத்துவ சினிமாக்கள் தமிழ் சூழலில் பரீட்சயமாகுவது அரிது. இதனை அறிந்து காட்சிப்படுத்துவதும் உரையாடுவதும் குறைவாகவே உள்ளது. ஜனரஞ்சகச் சினிமாக்கள் அதிகரித்துச் செல்லும் இச்சூழலில், கலைச் சினிமாக்கள் காட்சிப்படுத்தப்பட்டு அதன் உள்ளடக்கம் உரையாடுவது அவசியமாகின்றது. அப்போதே அதன் பரீட்சயத்தையும் அழகியலையும் முன்னெடுக்கலாம். இந்த முன்னெடுப்பின் பின்புலத்தில் 2015 இல் நடைபெற்ற ''ஐரோப்பிய திரைப்பட விழா'' குறிப்பிடத்தக்கது. இத்திரைப்பட விழாவில் காட்சிப்படுத்தப்பட்ட சினிமாக்கள் சமூக வாழ்வியலை கலைத்துவமாக இன்னுமொரு பண்பில் மாற்றித் தருகின்றது. இவ்வாறான மாற்றுக் கருத்து வெளிப்படுத்தப்பட்ட விதத்தை உரையாடலுக்குக் கொண்டுவருவதே இவ்வாய்வாகும்.

ஆய்வு முறையியல் **(Methodology)** பண்பு சார் ஆய்வு முறை (Qualitative research design) எனும் ஆய்வு அணுகு முறையே பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாய்வு விபரண **(Exploratory Method)** விமர்சன முறைமைகளைக் கொண்டது.

தகவல் சேகரிப்பு முறை (**Method of collecting Data)** முதனிலைத் தரவுகளாக கலைத்துவ சினிமா பற்றிய இறுவெட்டுக்கள், இணையத் தளங்கள், திரைப்படக் காட்சிப்படுத்தல்கள் என்பவும், இரண்டாம் நிலை தரவுகளாக கலந்துரையாடலில் பங்குகொண்டமை, இது தொடர்பான எழுத்துக்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் நோக்கம் **(Objectives):-** கலைத்துவ சினிமாக்கள் சமூக வாழ்வை மீள வடிவமைக்கும் விதத்தினை உணர்த்துவதாகும். ஆய்வின் வினா **(Research Question)** கலைத்துவ சினிமாக்கள் சமூக வாழ்வை மீளக் கொண்டு வருகின்றதா? என்பதாகும்.

**ஆய்வுப் பெறுபேறும் கருத்துரையும்**

**காட்சிப்படுத்தப்பட்ட திரைப்படங்களில் வெளிப்படும் சமூக வாழ்வியல்**

2015இல் ‘‘ஐரோப்பிய திரைப்பட விழா’’ ஒரு பகுதி மட்டக்களப்பில் ஐப்பசி 24, 25 இல் நடைபெற்றது. இது நுண்கலைத்துறையின் ஏற்பாட்டில் கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள், கலாசார இணைப்பாளர்கள் எனப் பலர் பார்த்ததோடு ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தெரிவித்தனர். இவ்விழாவில் ‘‘The Cheir of Happines”, “Theory of Everything”, “The Black Brothers”, “Morgen”, “We are young, We are strong” ஆகிய ஐந்து திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. ஐந்து திரைப்படங்களும் தமது சமகால ஐரோப்பிய சூழலையும் அதன் இன்றைய சமூக அரசியல் பண்பாட்டு விடயங்களையும் மனித மன உணர்வுகளையும் கலையழகுக்குள்ளால் மீள் வடிவம் செய்து தந்தது. இது சிந்தனைகளைத் தூண்டி, மனிதர் படும் நெருக்கடிகளை விசாலிக்க வைத்தது.

இவ்விழாவில் இத்தாலி, ஜேர்மனி, லண்டன், சுவிச்சலாந்து, றோமானியா ஆகிய நாடுகளின் படங்களே காட்சிப்படுத்தப்பட்டன. ஐரோப்பிய சூழலில் சமகாலத்தில் நிலவுபவையும், சமகால ஐரோப்பிய மனிதர்கள் வேண்டி நிற்பவையும் உணர்வுபூர்வமாக வெளிப்பட்டன. திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஒரு சமுதாயத்தின் விபரிப்பையும், அவர்களது எதிர்ப்புணர்வுகளையும் கலையழகுடன் யதார்தமாகத் தந்துள்ளனர். கலைத்துவ சினிமாக்களின் எண்ணக்கரு, அதன் கருத்து போன்றவற்றை விளங்கிக்கொள்ளுதல், அதனைச் சமகால சமுதாய சூழலுடன் தொடர்புபடுத்துதல் போன்றவை முக்கியமானது.

சமுதாயம் ஒருங்கிணைந்து கூடி வாழும் பண்பு அவசியமானது என்பதைப் புலப்படுத்தியது. கொண்டாடுதலும் மகிழ்தலும் நகர்ப்பகுதி தவிர்ந்த ஊர்ப் பகுதிகளிலேயே உள்ளது. நெருக்கடி மிகுந்த நகரச் சூழல் தன்நிறைவுக்குத் தடையை ஏற்படுத்துவது, அதி - நவீன ஆக்கிரமிப்பும், புதிய தொழிநுட்பமும், உலகமயமாக்கற் சூழலில் மனிதரை வைத்திருக்கும் நிலையும் உணர்த்தப்பட்டது. மனிதர்கள் அதிகாரிகளால் அடிமையாக்கப்படுவதும் அவர்களது கூலிகளைச் சுரண்டுவதும் அதன் துன்பியலும் சலனங்கலாக்கப்பட்டன. ‘‘இளைஞர்கள் வேலைக்காக அடிமைகளாகக் கடத்தப்பட்டு எஜமான்களிடம் விற்கப்படுவது, பணம் கொடுத்து ஏலத்தில் எடுத்த மனிதரைக் கொண்டு அவர்களை வேலைக்கமர்த்தி

அப்பணத்தையும் விட அதிகமாக உழைத்து சம்பாதிக்கும் கொடூரத்தனமும் குடும்பத்தார் துன்புறுத்துவதும், கொடுமைப்படுத்துவதும், பாரபட்சம் காட்டுவதும் புலனாகியது" (படம்: The Black Brothers / Switzeland / 2013/100') இது முக்கிய சமூகச் சிக்கலாகும். வாங்கிய மனிதரை வைத்து உழைத்து அவ்வுழைப்பைச் சுரண்டி இன்னுமொருவர் அனுபவிக்கும் மிருகத்தனமான போக்கைக் காட்டியது.
பாதிக்கப்பட்டவர்கள் ஒடுக்கும் சக்திகளுக்கு எதிராக ஒன்றிணைந்து குழுவாகச் செயற்படும் போக்கு, அவர்கள் **அடிமைகள் என்ற பெயரில்** ஒன்றுபட்டு அதிகார ஆபத்திற்கு எதிராகச் செயற்பட்டமை முக்கிய பதிவாகும். இவர்கள் "கறுப்புச் சகோதரர்கள்" என தனது குழுவிற்குப் பெயர் வைத்தனர். இவ்வாறான வெள்ளை இன அடிமைகள் புகைக் கூட்டைச் சுத்தம் செய்யும்போது கரியுடனும் தூசியுடனும் உருவாக்கப்படுவதையும், அடிமை எனும் எண்ணத்தைக் கொடுப்பதையுமே **கறுப்பு** (Black) சுட்டி நிற்பதை நோக்கலாம்.

இரு குழு அதிகார எதிர்ப்புக்காகப் போராடும் போது அந்த அதிகார சூழலில் உள்ளவர்களும் போராடுபவர்களுக்கு உதவுவர் என்பதைக் காட்டுகின்றது. (படம்: The Black Brothers / Switzeland / 2013/100') இது, 1960களில் ஈழத் தமிழர் மத்தியில் தீண்டாவை, சாதியம் தொடர்பான கொடுமை வலுப்பெற்றபோது ஒடுக்குபவர்களுக்கு எதிராக ஒடுக்கப்படுபர்கள் போராடும்போது ஒடுக்குபவர்களில் பலரும் இந்த நாசகாரச் செயலுக்கு எதிராக ஒன்றுபட்டு "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில்" இணைந்து செயற்பட்டதை ஒப்பிடலாம்.

ஒரே நாட்டுக்குள்ளே காலனிய ஒடுக்குதல்கள் காணப்படுவதை அடிமைகளாக மனிதர்கள் விற்கப்படுவது சுட்டி நிற்கின்றது. காலனியவாதிகள் ஆசிய நாடுகளில் தமிழர்களையும் கறுப்பினத்தவரையும் அடிமைகளாக்கி தமக்குச் சேவகம் செய்வதற்குப் பயன்படுத்தியதை இது ஒத்தது. அந்நாட்டுக்குள்ளே அடிமையாக்கப்படுவதும், அவர்களே வன்முறையை எதிர்த்து போராடுவதும் அனைவருக்கும் பெதுவானது. "இது ஒரு சமூகத்தின் உள்ளார்ந்த சாரமாகும்". (திருநாவுக்கரசு:ப: 1995:30)

மலைவாழ் பிரதேசம்; அதன் இயற்கையுடனான கூடி வாழ்தல்; அங்குள்ள இயற்கை சூழல்சார் தொழில்கள்; நிம்மதியான வாழ்க்கை; அன்பு, இரக்கம் ஆகிய உணர்வு வெளிப்பாடுகள் என்பன அனைத்துப் படங்களிலும் வெளிப்பட்டன. இது, ஐரோப்பியச் சமூகம் நகரமயச் சூழலில் மூச்சுத் திணறி தனிமைப்படுத்தப்பட்டு வாழ்வதை உணர்த்துகின்றது.

கிராமப்புறங்கில் வாழும் மனிதர்களிடம் மனிதாபிமான உணர்வு காணப்படுவதையும் எடுத்துக்காட்டியது. (Chair of happiness /Itaty/ 2013/93') ஆசைப்படுவது அனைவருக்கும் பொதுவானது என்பதைக் காட்டியது. காதல் ஜோடிகளும், மதகுமாரும் **புதையல்; அதனூடாக வரும் மகிழ்தல்** ஆகியவற்றிற்கு ஆசைப்பட்டு அலைவதை வெளிக்கொணர்ந்தது. பிறரது சொத்துக்களுக்கு ஆசைப்படுவது அழிவைத் தரும் என்பதை உணர்த்தியது. சமகால உலகில் மனிதர் பணத்தைத் தேடியலைபோது மனிதம் முன்னிலைப்படுத்தப்படவதில்லை என்பதை இது உணர்த்துகின்றது.

எமது சூழலிலும் கல்வியியலாளர்கள், மதகுருமார், சாதாரணமக்கள் என அனைவரும் புதையலுக்காக அடிபிடிப்பட்டு தம்மையும் தமது சேமிப்பபையும் இழந்துவிடும் பரிதாப நிலமையை இது ஒத்தது. Chair of happiness எனும் திரைப்படத்தைப் பார்க்கும்போது இது தெளிவாகியது. இப்படத்தில் மதகுரு தமது பாட்டியின் பணத்தைத் தேடியலைந்து இறுதியில் இறந்து விடுவதையும் காணலாம்.
எதிர்பார்ப்புகளைத் தாண்டி உதவி செய்யும் மனப்பாங்கும் முக்கியமான சமூக வாழ்வு என்பதை **ஸ்ரீபன் ஹொக்கிங்** எனும் விஞ்ஞானியின் யதார்த்த வாழ்வை

மையப்படுத்திய படமான "The Theory of Everything" எனும் திரைப்படம் காட்டியது. படித்த இளம் வயதுடையவரைக் காதலித்து பின்னர் அவரது உடல்நிலை சோர்ந்து, பக்கவாதம் வந்து இயங்கமுடியாத நிலை வந்தபோதும் காதலைச் சொல்லி திருமணத்திற்குச் சம்மதமாகுதல், காதலன் 2 வருடத்திற்கு மட்டும் தான் இருப்பான் என வைத்தியர் கூறியும் அதனையும் பொருட்படுத்தாது திருமணம் செய்து 3 பிள்ளைகளைப் பெற்று இயலாத கணவனுக்கு பணிவிடை செய்து வாழ்தல் அப்பெண்ணின் மனிதாபிமான எண்ணத்தை "The Theory of Everything" எனும் திரைப்படம் கலை நயத்துடன் வெளிப்படுத்தியது. நோயினால் இள வயதிலே பாதிக்கப்பட்டவரை அவரது மனைவி விஞ்ஞானியாக்குவதற்கு உறுதுணையாக இருந்தமையானது அவளது அர்ப்பணிப்பையும் தியாகங்களையும் காட்டுகின்றது. அவளது மனித உணர்தலும் பாலியல் ரீதியான சந்தோசப்படுத்தல்களும் தேவைகளை நிறைவேற்றுதல்களும் யதார்த்தத்திற்கு மாறானதாக இருக்கவில்லை. மனிதருக்கு மனிதர் உதவுதல் முக்கிய சிந்தனையாகும். வாழ்க்கை வேறு, கல்வி, கண்டுபிடிப்பு வேறு, மனித உணர்வு விருப்பு வெறுப்பு வேறு அல்ல. எல்லாம் இணைந்ததே சாதனை. அதாவது விஞ்ஞானம், மனித வாழ்கை, உணர்வு ஆகியவை தனியானதல்ல எல்லாம் ஒன்றுசேர்ந்ததே வாழ்வு.

மாற்றுத் திறனாளிகளை ஒதுக்கி ஓரங்கட்டாது அந்தக் குடும்பச் சூழலில் அன்பையும் ஆதரவையும் காட்டும்போது, அவர்கள் மன அழுத்தத்திற்குள்ளாக்காது அவர்களது திறன், ஆற்றல், நிபுணத்தவங்களை வெளிப்படுத்துவார்கள் என்பதை இப்படம் சுட்டியது. இயலாத ஸ்டீபனுக்கு வைத்தியர்கள், கல்விச் சமூகத்தினர், ஆராய்ச்சியாளர்கள் நண்பர்கள் உதவும் பாங்கு முக்கிய படிப்பினையாகும். இல்லங்களில் இவர்கவை விட்டு ஒதிக்கி விடாது குடும்பத்தோடு வைத்து பார்த்து சக மனிதர்கள்போல் உணர்ந்து வாழ வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. கல்விச் சமுதாயம் (Academic community) கண்டுபிடிப்பிலும் ஆராய்ச்சியிலும் ஒருவருக்கான இடத்தைக் கொடுத்து ஊக்கப்படுத்துவதன் ஊடாக நல்ல சமுதாய பெறுபேற்றை அடையலாம்.

குடியேற்றவாசிகளினால் சுதேசிகளுக்கு நடக்கும் ஒடுக்குதலும் ஓரங்கட்டப்படுதல்களும் பேசப்பட்டன. (Morgen /Romania/2010/100') ஜேர்மனியில் இவ்வாறான சிக்கல் நிலவுவதனையும் **சமூக சிக்கலாக** இது உருவாகி இளைஞர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமையையும் காட்டுகின்றது.
புலம்பெயர்ந்தோரால் ஐரோப்பிய இளைஞர்கள் தொழில் வாய்ப்பு இல்லாது திண்டாடப்படுதல், நிம்மதியாகவும் மகிழ்வாகவும் வாழ முடியாது துயரப்படுதல் போன்றவற்றையும் எதிர்த்துப் போராடும் நிலமைக்குத் தள்ளப்படுகின்றமையும் இயல்பாகக் காட்டப்படுகின்றது. "தமது பண்பாட்டின் மீது குடியேற்ற ஆதிக்கம் திணிக்கப்பட்டு, அதனால் மாற்றப்பட்டதன் விளைவாக முற்றிலும் தவறாகப் புரிந்து கொண்ட ஒரு பாரம்பரியம்" (ப.திருநாவுக்கரசு:1995:29) இன்றும் வாழ்வதை அறியலாம். புலம்பெயர் மக்கள் பாதிக்கப்பட்டு பயந்து, நடுநடுங்கி கவலையடைந்து திண்டாடுதல் என்பன போன்றவை வெளிப்படுகின்றன.
சுதேசிய இளைஞர்கள் மனக் குழப்பமடைதல், விரக்கியடைதல் வன்முறைக்குத் தூண்டப்படுதல், கைது செய்யப்டுதல் என்பன போன்றவை ஐரோப்பாவில் நிலவும் புதிய பிரச்சினையாக உள்ளது. இது புலம்பெயர்ந்தவர்களுக்கும் புதிய பிரச்சினையாக உள்ளது. இங்கு குடியேற்ற எதிர்ப்பு கலையழகுடன் எடுத்துக்காட்டுகின்றது.

நவீன தாராளமயமாக்க காலத்தில் யாரும் போகலாம் வரலாம் பொருளை ஏற்றலாம் இறக்கலாம் பயன்படுத்தலாம். ஆனால், மனிதரை எவ்வாறான நிலையில் வைத்திருக்கின்றது என்பது தொடர்பான உணர்தல் அவசியமாகும். முதலாளித்துவ

சூழலில் பொருள் எல்லா இடங்களுக்கும் போகின்றது. ஆனால், ஆட்கள் எல்லா இடத்துக்கும் போக முடியாது. பல்வேறுபட்ட சட்ட நடவடிக்கைகளால் அசைய முடியாத திண்டாட்டங்கள் நிலகின்றது. எனினும், **மனிதரைக் கடத்தி விற்றல்** சர்வ சாதாரணமாக உள்ளது. We are Young, We are Strong எனும் திரைப்படம் இதனைச் சிறப்பாகக் கூறுகின்றது. அதே வேளை முதலாளித்துவம் தோற்க கிராமிய சமுதாய வாழ்தலை நாடி சமூகம் நகர்வதையும் காணலாம்.
ஈழத்துத் தமிழ் அகதிகள் 30 வருட காலமாக இந்தியா முகாமில் சுயமாகச் செயற்பட முடியாது; அரசியலில் ஈடுபட முடியாது; கூடிச் செயற்பட முடியாது வாழ்கின்றனர். சட்டவிரோதமாகச் செல்வதால் உயிரையும் இழக்கும் சூழலையும் அங்கு சென்று மிக அடிமட்டக் கூலித் தொழிலுக்கு அமர்த்தப்பவதையும் காட்டுகின்றது. சமகாலத்தில் சட்டவிரோதக் குடியேற்றக்காரருக்கு நடக்கும் ஏமாற்றங்களைப் பொருத்திப்பாக்கலாம்.

சமகாலத்தில் வெளிநாட்டக்குச் செல்ல வேண்டும் எனும் பேராசையால் கடன்பட்டுச் சென்று பொருளையும், பணத்தையும், உயிரையும் இழத்தல், முகவர்களினால் ஏமாறுதல் என்பன எமது சமுதாய நோக்காக உள்ளன. இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக அஸ்திரேலியா, இத்தாலி, இந்தியா ஆகிய நாடுகளுக்குச் சென்று துன்பப்படும்; ஏமாற்றப்படும் நிலவரமும் இதனை ஊடாட வைக்கின்றது.

**முடிவுரை**

காட்சிப்படுத்தப்பட்ட படங்கள் ஐரோப்பாவின் சமகால சமுதாய சூழலையும் அங்குள்ள மனிதர் எதிர்நோக்கும் சிக்கல்கள், பிரச்சினைகளையும், எதிர்பார்ப்புகளையும் கூறுவதோடு பல நல்ல விடயங்களையும் வெளிநாட்டவருக்கான படிப்பினைகளையும் தருவதாக அமைந்தது.
ஆடலும் பாடலும் விரசமும் கேலியும் வில்லத்தனமும் நிறைந்திருக்கும் சினிமாச் சூழலில் கலைத்துவப் படைப்புக்கள் யதார்த்தமான வாழ்தலை ஒட்டியதாக கலையழகுடன் தருகின்றது. நல்ல படங்களைப் பார்த்தல் பரீட்சயமாதல் கலந்துரையாடல் என்பன முக்கியமானது.

மாற்றுச் சினிமாவின் தேவை, அதன் பெறுமதி, அது மக்களை விழிப்படைய வைக்கும் முறை போன்றவற்றின் புரிதல் சமகால தென்னிந்திய மசாலாச் சினிமாக்களின் நெருக்கடிச் சூழலில் அவசியம். கலைத்துவ சினிமாக்கள் சமுதாய வாழ்வின் பல்வேறு கூறுகளையும் அவர்கள் எதிகொள்வதையும் கலை அழகியலுடன் மிகவும் காத்திரமாக மீள வடிவமைத்துத் தந்துள்ளது. ஒரு சமூகத்தின் வாழ்வியல் அரசியல், பண்பாடு அரசியல், அவர்கள் வெளிப்படுத்தும் சமூகத் தேவைகள், அச்சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள், நெருக்கடிகள் பற்றியதை சினிமா யதார்த்தமாக வெளிப்படுத்தும் போதே நிலைத்து நிற்பதற்கான வாழ்தலைப் பெறலாம். இதனை இத்திரை பட விழாவின் திரைப்படங்கள் வெளிப்படுத்துகின்றன. அத்தோடு நாம் வாழும் சமகால சமுதாய நிமையையும் பகுப்பாய்வு செய்ய வழிப்படுத்துகின்றது. எமது சூழலில் எடுக்கப்படும் குறுந் திரைப்படத்தைக் கூட, ஆதர்சமாகக் கொள்ளவேண்டும் எனும் புரிதல் அவசியம். உண்மையானதும் யதார்த்தமானதும் ஆக்கபூர்வமானதுமான பிரக்ஞையைக் கொண்டுவருவது சினிமாக்களின் முக்கிய கடமையாகும். திரைப்படங்களை எடுப்பவர்கள் சமுதாகமயப்பட்டவர்களாக இருக்கும் போதே சாத்தியமாகும்.

**உசாத்துணை நூல்கள்**

1. இன்பமோகன்.வ., கலைத்துவ சினிமா, குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை, 2012.
2. திருநாவுக்கரசு.ப., (தொகுப்பாசிரியர்), மக்களுக்கான சினிமா, நிழல் வெளியீடு, சென்னை, 1995.

3. திருநாவுக்கரசு. ப., (தொகுப்பாசிரியர்), சொல்லப்படாத சினிமா, நிழல் வெளியீடு, சென்னை, 2004.
4. சிவத்தம்பி. கா., தமிழ்ப் பண்பாட்டில் சினிமா, மக்கள் வெளியீடு, சென்னை, 2004.

**இறுவெட்டுகள்**

1. We Are Young , We Are Strong/ Germany/2014/127’
2. The Theory of Everything/UK/2014/94’
3. Chair of happiness /Itaty/ 2013/93’
4. The Black Brothers / Switzeland / 2013/100’
5. Morgen /Romania/2010/100’